**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**SC No. 106 /2023**

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் நாள் திங்கள்கிழமை

அ.சா.3 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. செல்வமணி Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சஞ்சய் | த/பெ.: | மாரிமுத்து |
| கிராமம்: | பாமனி, உம்பளச்சேரி ரோடு | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | கூலி வேலை |
| வயது: | 24 | முகவரி: | பாமனி, உம்பளச்சேரி ரோடு |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 27.01.2025

**முதல் விசாரணை:_**

எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் எனது பெற்றோர்கள் ஆவார். இறந்துபோன சந்தியா எனது சகோதரி ஆவார். 14.02.2022 நான் பெரம்பலூரில் வேலை பார்த்து கொண்டிருந்தேன். மாலை 05.00 முதல் 06.00 மணியளவில் எனது சித்தப்பா சுரேஷ் என்பவர் எனக்கு போன் செய்தார். போனில் என்னிடம் என்ன செய்து கொண்டிருக்கிறாய் என்று கேட்டார். நான் வேலைக்கு சென்றுவிட்டு தற்போது தான் வந்தேன் என்று சொன்னேன். எனது சித்தப்பா எனது தங்கை சந்தியா இறந்துவிட்டதாக சொன்னார் பின்னர் உடனடியாக போனை வைத்து விட்டார். பின்பு உடனடியாக நான் எனது அம்மாவிற்று போன் செய்தேன். அப்போது எங்கள் வீட்டிற்கு அருகில் குடியிருந்து வரும் பாப்பாத்தி என்பவர் போனை எடுத்து எனது தங்கை மருத்துவமனையில் இருப்பதாகவும், என் அம்மா தங்கையுடன் மருத்துவமனையில் இருப்பதாகவும், நான் மருத்துவமனையில் வெளியில்

இருப்பதாகவும் சொன்னார். மறுநாள் அதிகாலை 05.00 மணியளவில் எனது ஊருக்கு வந்துவிட்டேன். நான் வந்து என் வீட்டில் பார்த்தபோது எனது அம்மா, பாப்பாத்தி ஆகியோர்கள் அவர்களது வீட்டில்தான் இருந்தார்கள். என் அம்மா எனது வீட்டில் இருந்தார். என் அம்மா என்னை பார்த்து எனது தங்கை 14.02.2022ல் வீட்டில் இருந்தபோது எதிரி வீட்டிற்குள் வந்து என் தங்கையிடம் என்ன சொன்னார் என்று தெரியாது. பின்னர் எதிரி அங்கிருந்து சென்றுவிட்டார். பின்னர் எனது தங்கை தூக்குமாட்டிக்கொண்டு தற்கொலை செய்து கொண்டதாக சொன்னார்கள். எனது தங்கை இறப்பதற்கு முன்பு இரண்டு ஆண்டுகளாக எதிரி என் தங்கையுடன் காதலித்து வந்தார். அதனால் எங்கள் வீட்டில் பிரச்சனை ஏற்பட்டு எனது அப்பா எனது தங்கையை கண்டித்தார். பின்னர் எனது தங்கை லோகேஷை மறந்துவிட்டார். பின்னர் அந்த வீட்டிலிருந்து வேறு வீட்டிற்கு வாடகைக்கு குடி சென்றுவிட்டோம். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். நடந்ததை சொன்னேன்.

**<u>எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாணை இல்லை என தெரிவித்துள்ளார்.</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.